Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 29 ஆம் நாள் துல்ஹஜ் 7 (12-5-62) சனிக்கிழமை இதழ் 90

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# ராதா கிருஷ்ணன் இந்திய ஜனாதிபதி

## மிகப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு

## நாட்டின் புதிய தலைவருக்கு பலர் பாராட்டுக்கள்

புதுடில்லி, மே 11

டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் இந்தியாவின் ஜனாதிபதியாக மிகப் பெரும்பான்மை வாக்குகளால் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்குக் கிடைத்த வாக்குகள் 5,53,067. அவருடன் போட்டியிட்ட திரு. சௌத்ரிஹரிராமுக்கு 6300 வாக்குகளும், திரு. யமுனு பிரஸாத் திருகுலியாவுக்கு 3537 வாக்குகளும் கிடைத்தன.

இன்று பிற்பகல் 4-30 க்குப் பின் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமை புதிய ஜனாதிபதி பொறுப்பேற்பார்.

கல்வியில் சிறந்தவரும், தத்துவ ஞானியும், மேதையும், ராஜதந்திரியும் பேரறிஞருமான டாக்டர் ராதாகிருஷ்ணன் உலகப்புகழ் பெற்ற பெரியார். அவருக்கு வயது 73. டாக்டர் ராதாகிருஷ்ணனை இளமையிலேயே புகழ் தேடி வந்தது. தாகூரின் தத்துவம் பற்றி அவர் தமது 30 வது வயதில் எழுதிய நூல் பெரும் பாராட்டைப்பெற்றது. இந்திய தத்துவஞானம் பற்றிய அவரது நூல் உலகப்புகழைக்கொண்டு வந்தது. 1936-ம் ஆண்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தில் கீழைநாட்டு தத்துவ, மதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷ் அக்காடமியில் உறுப்பினராகவும் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

காந்திஜியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் மாஸ்கோவில் இந்தியத் தூதராகவும், பின் உபராஷ்டிரபதியாகவும் கடமையாற்றினர்.

ராஜ்யசபையில் 10 ஆண்டுகள் தலைவராகக் கடமையாற்றிய அவருக்கு 1954ல் "பாரத ரத்ன" கௌரவம் அளிக்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

# சிங்களம் படித்தால் வேலை கிடைக்குமா?

## சிங்களவர்களுக்கே வேலை கிடைக்கவில்லையே!

### —எஸ். ஜே. வி. அறிக்கை

கொழும்பு, வெள்ளி

"படித்த சிங்கள மக்களுக்கே வேலை வாய்ப்பளிக்க முடியாமலிருக்கும் அரசாங்கம் சிங்களத்தைப் படித்துவிட்டால் தமிழ்ப் பிள்ளைகளுக்கு வேலை கொடுத்துவிடுமா?" என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் கேட்டுள்ளார்.

பொதுவாகத் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் குறிப்பாக தமிழ்ப்பேசும் பெற்றோர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் திரு. செல்வநாயகம் இன்று ஒரு அறிக்கை விடுத்தார்.

"மொழிப்பிரச்சினை சம்பந்தமாக இன்று உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கும் இதே சமயம், சமீபத்தில் எங்கள் பகுதிகளில் அரசாங்கம் ராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்ட பொழுது நீங்கள் அதை வீரர்களாக எதிர்த்துச், சமாளித்து ஆயுதப் படைகளை 'ஏவி'விட்டாலும் நாங்கள் தலைகுனிந்து எங்கள் உரிமையை விட்டு விடமாட்டோம் என்று அரசாங்கத்துக்குத் தெரிவித்த உங்கள் உறுதியைப் பாராட்டுகிறேன்" என்று திரு. செல்வநாயகம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"மொழிதான் ஒரு சமுதாயத்தின் ஜீவநாடி. ஒரு சமூகம் தனது தனித்தன்மையுடன் விளங்க வேண்டுமானல் அதற்கு முக்கியம் அதன்மொழி. தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் மொழி உரிமையைப் பெறுவதற்குத் தொடர்ந்து போராட வேண்டியது அவர்களது கடமை" என்று திரு. செல்வநாயகம் கூறுகிறர்.

அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கும் அரசாங்க ஆதரவுள்ள ஸ்தலஸ்தாபனங்களிலுள்ளவர்களுக்கும் திரு. செல்வநாயகம் தமது அறிக்கையில் சிங்களத்தில் தேர்ச்சிபெற்றாலும் பெரும்பயன் கிடைக்கப் போவதில்லையென்றும் சமூகத்தின் நன்மையைப் பெரிதாகக்கருதி அரசாங்க சேவையில் முன்பு சேர்ந்தவர்களானலும் சரி பின்பு சேர்ந்தவர்களானலும் சரி சிங்களத்தைப் படிக்கக் கூடாதென்றும்கோரியுள்ளார். சம்பள உயர்வு நிறுத்தப்படும் என்ற பயமுறுத்தலுக்கோ வேலை நீக்கம் செய்யப்படும் என்ற மிரட்டலுக்கோ அஞ்சக் கூடாது என்று அவர் கேட்டுள்ளார்.

தமிழ்ப்பேசும் பெற்றோருக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் திரு. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளதாவது:

சிங்கள மக்களில் பெருந்தொகையானவருக்கே வேலை வாய்ப்புக் கொடுக்க அரசாங்

(5-ம் பக்கம் பார்க்க)

# பிரஞ்சு மொழியில் ஜி. ஜி. குறுக்கு விசாரணை

## நீதி மன்றத்தை ஆச்சரியத்திலாழ்த்தினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரெஞ்சு மொழியின் மூலம், அரசாங்கத்தின் சார்பில்வாக்குமூலமளித்த தங்கம்பற்றிய விஷயங்களில் நிபுணரான பிரெஞ்சுக்காரர் ஒருவரைக்குறுக்கு விசாரணை செய்ததன் மூலம் வழக்குத் தாக்கல் செய்தவர்களின் சார்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. கோர்ட்டில் குழுமியிருந்தவர்களை அதிசயக் கடலில் மூழ்கச் செய்தார்.

ரூபா 80,000 பெறுமதியுள்ள தங்கக் கட்டிகளை அரசாங்கம் கைப்பற்றியுள்ளதென்றும் அதைத் திருப்பிப் பெறும் நோக்கமாக திரு. ஐ. ஞானப்பிரகாசம், அவரது மனைவி கிரேஸ் ஆகியோர் முடிக்கெதிராகத் தொடுத்திருந்த வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. தனபாலசிங்கத்தின் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது மேற்கூறிய சம்பவம் நடைபெற்றது.

பிரெஞ்சு தூதுவராலயத்தைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர் ஒருவர் கோர்ட்டில் பிரசன்னமாயிருந்தார். பாரிஸைச் சேர்ந்த நிபுணரான திரு. டுபுவா சாட்சியமளித்தார்.

பவுன் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டபொழுது யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. ஸ்ரீகாந்தா சி. சி. எஸ் முடிக்குரிய தரப்பில் சாட்சியமளித்தார். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் தன்னிடம் கொண்டுவரப்பட்டபொழுது கருவாட்டு மணம் மணந்ததெனவும், கனகசபை-, (யப்பான்) என அழைக்கப்படும் ஒரு நகை வியாபாரியைக்கொண்டு தான் பவுனை நிறுத்ததாகவும் பின்னர் சுங்க இலாகா கட்டுப்பாட்டதிகாரி திரு. செல்வரத்தினத்தின், திருமதி ஞானப்பிரகாசத்தினதும் வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொண்டதாகவும் கூறினர்.

அப்போது உதவி ஏஜண்டாகவும் சுங்க இலாகா வரி அதிகாரியாகவும் கடமையாற்றிய திரு. பத்மநாதன் தொடர்ந்து சாட்சியமளித்தார்.

பறிமுதலான பவுனுக்கு முதலில் தான் ரூபா 255,000

(5ம்- பக்கம் பார்க்க)

# யாழ். மாநகரசபைக் கூட்டம் அமைதியாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

எதிர்பார்த்ததற்கு மாருக யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதந்தக் கூட்டம் மேயர் எம். யேக்கப் தலையில் மிக அமைதியாக நடைபெற்றது. நிகழ்ச்சிநிரலில் குறிப்பிடப்பட்டிருந்த விஷயங்களில் பல எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில பின் போடப் பட்டன.

மாநகரசபை என்ஜினியரை வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய வேண்டும் அல்லது கட்டாய லீவில் இருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும் என டாக்டர் தர்மலிங்கத்திஞல் கொண்டுவரப் பட்ட பிரேரணை பற்றிய விவாதம் சுமார் இருமணி நேரம் நீடித்த பின் வாக்குககு விடப்பட்டது.

டாக்டர் எஸ். எ. தர்மலிங்கம், திருவாளர்கள் ஜே. எஸ் அழகையா, எஸ். ராசரத்தினம், என். ரி. செல்லத்துரை ஆகியோர் பிரேரணையை ஆதரித்தும் திருவாளர்கள். எ. ஜி. ராஜசூரியர், கே. எஸ். நடராசா ஆகியோர் எதிர்த்தும் பேசினர். இப்பிரேரணை வாக்குகள் அதிகமாகப் பெற்று நிறைவேறியது.

தமிழ்பேசும் மக்கள் தாங்கள் பொலிஸ்ரேசன்களில் கொடுக்கும் வாக்கு மூலங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

பார்லிமெண்ட்

# "ராஜினமா செய்வோம்"

## இரு அரசாங்க எம். பி. க்கள் பயமுறுத்து

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த இரு எம். பிக்கள் ராஜினமாச் செய்யப்போவதாய் இன்று காலை நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் பயமுறுத்தல் விடுத்தனர். நுவரேலியா எம். பி. திரு. டி. வில்லியம் பெர்னண்டோ தாம் அரசாங்கக் கட்சியைவிட்டு விலகப்போவதாய்க் கூறினர். இரண்டாவதாக கலவான எம். பி. திரு. எப். டி. எஸ். ஏ. குணசேகரா தமது ஸ்தானத்தை ராஜினமாச் செய்யப் போவதாய் அறிவித்தார்.

பலதொழில் நுட்பக்கல்லூரிகளுக்குப் பதிலாக, ஒரு அதிபரின்கீழ் சகல வசதிகளுடன் ஒரே தொழில்நுட்பக் கல்லூரியை அடுத்த நிதிஆண்டில் அரசாங்கம் நிறுவாதிருப்பின் அரசாங்கக் கட்சியிலிருந்து

(8-ம் பக்கம் பார்க்க)

# இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 29-ம் நாள் சனிக்கிழமை (12-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381 துல்ஹஜ் மாதம் 7-ம் பிறை.

காலை 9-45 வரை அட்டமி அதன்பின் நவமி. பின்னிரவு 4-43 வரை மகம். அதன்பின்னர் பூரம். அமிர்தசித்தயோகம். இராகுகாலம் 8-54 முதல் 10-24 வரை.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

மகம்—பூரம்: கடன்வரவு, பிரயாணம், முயற்சித்தடை, பிணக்கு.

மேடம்: பிரயாணசுகம், தொழிற்சித்தி, உறவினர் சேர்க்கை, புண்ணியச்செலவு.

இடபம்: வித்தைச்சிறப்பு, முதியோர் தொடர்பு, தெய்வ வழிபாடு, சமூகமதிப்பு.

மிதுனம்: அசாத்தியசிந்தனை, வீண்பொழுதுகழிதல், நல்லோர் எதிர்ப்பு, பணமுடை.

கடகம்: தொழில்விருத்தி, உழைப்பால் ஆதாயம், சிந்தை தெளிவு, நல்லோர்கூட்டு.

சிங்கம்: கடன்வரவு, வழக்கு வெற்றி, பிரயாணசுகம், முயற்சிக்குப்பலன்.

கன்னி: நல்லோர்நட்பு, வாக்குச்சித்தி, பிரயாணம், செய்காரியவெற்றி.

துலாம்: வித்தைச்சிறப்பு, உறவினர் கொண்டாட்டம், பணவரவு, மதிப்புயர்ச்சி.

விருச்சிகம்: தொழில்சிறப்பு, அதிகாரிகள் உதவி, ஊழியர் இடர், பணவரவுதடை.

தனு: சுபசெய்தி, தருமசிந்தனை, மதிப்பு, இனபந்துக்கள் கொண்டாட்டம்.

மகரம்: தெய்வவழிபாடு, புண்ணியச்செலவு, தேகாரோக்கியம், போசனசுகம்.

கும்பம்: ஊழியர்தொல்லை, தொழிற்கேடு, பணமுடை, மனத்தளர்ச்சி.

மீனம்: கடன்வரவு, தொழிற்சிறப்பு, ஊழியர்உதவி, பெரியோர்நட்பு.

### 13-5-62

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 30-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (13-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381 துல்ஹஜ் மாதம் 8-ம் பிறை.

காலை 11-34 வரை நவமி, அதன்பின் தசமி. இன்று முழுமையும் பூரம். சித்தயோகம். இராகுகாலம் 4-24 முதல் 5-54 வரை.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது,

## இராசிப்பலன்

பூரம்—தாயாதிகளால்இடர், பணமுடை, வம்புவழக்கு, மனக்கவலை.

மேடம்: மனநிம்மதி, நல்லோர்நட்பு, தெய்வவழிபாடு, சிந்தனை.

இடபம்: தேகாரோக்கியம், தொழிற்சிறப்பு, தாயாதிகள் உதவி, குடும்பநன்மை.

மிதுனம்: கடன்வரவு, மதிப்பு, தொழில்நன்மை, பிரயாணம்.

கடகம்: கடும் உழைப்பு, ஊதியக்குறைவு, குடும்பச் செலவு, மனக்கவலை.

சிங்கம்: வித்தைச்சிறப்பு, வாக்குவெற்றி, சகோதர உதவி, மதிப்பு.

கன்னி: தொழில்பெருக்கம், பணவரவு, ஊழியர்உதவி, குடும்பசுகம்.

துலாம்: நண்பர்சேர்க்கை, தொழிற்கேடு, பணமுடை, ஊக்கக்குறைவு.

விருச்சிகம்: வித்தைச்சிறப்பு பரீட்சைவெற்றி, நல்லோர் நட்பு, புகழ்.

தனு: வாக்குச்சாதுரியம், தார்மீகசெலவு, தொழில் நாணயம், நன்மை.

மகரம்: கொள்ளல் விற்றல் இலாபம், சிந்தனைத்தெளிவு, குடும்பசுகம், வாக்குவெற்றி.

கும்பம்: சகோதரர் உதவி, தெய்வவழிபாடு, புண்ணியச் செலவு, நிம்மதி.

மீனம்: தொழிற் சிறப்பு, பணவரவு, அற்பர் தொடர்பு, பெரியோர் விரோதம்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாகளுக்கும் நற்சாட்சிப்பத்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### புளியங் கொட்டை தேவை

புளியங் கொட்டை சேகரித்துத் தரக்கூடியவர்களிடம் நாம் ரூத்தல் கணக்கில் விலைக்கு எவ்வளவும் எடுக்கத் தயாராயுள்ளோம்.

S. கோணேசலிங்கம்
159/3, கோவில் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்

### வீடு தேவை

சகல வசதிகளுடனும் கூடிய சிறிய வீடு யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் பஸ் பாதையாயின் மானிப்பாய், கோண்டாவில், இணுவிலிலும் விரும்பத்தக்கது. பெட்டி எண் எண்261, c/o ஈழநாடு த. பெ. Hw 49, யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

யாழ். மாநகரசபை

மணிக்கூடு கோபுரத்திலிருந்து ஆரம்பமாகி, ஆஸ்பத்திரி வீதியைச் சந்திக்கும் மகாத்மா காந்தி வீதி, இம் மாதம் 14 ம் திகதி திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை சகல போக்கு வரத்துகளுக்கும் மூடப்பட்டிருக்கும்.

(டி. டி. ஜயசிங்கா),
கமிஷனர்,
யாழ்ப்பாணம் மாநகரசபை.
மே 8, 1962.

## கைம்பெண்ணை ஏமாற்றிய கபட சந்நியாசி

ஜோத்பூர், மே 10

காவி உடை தரித்து வந்த சந்நியாசி ஒருவர், ஒரு கைம்பெண்ணிடமிருந்து ரூ. 40, 000 மதிப்புள்ள நகைகளைக் கவர்ந்து சென்று விட்டார்!

இந்த ஆசாமி கைம்பெண்ணின் கைரேகையைப்பார்த்து, சில சாந்திச்சடங்குகள் செய்ய வேண்டுமென்று தெரிவித்து, வீட்டில் இரு தினங்கள் தங்கியிருந்தாரென்றும், பின்னர் சூழ்ச்சியாக பாம்பொன்றை வீட்டுக்குள் விட்டு, அது அப்பெண்ணின் கணவனின் ஆவியென்றும், அவளது ஒரே மகனைப் பலிவாங்கும் எண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறது. என்றும் இதற்குசாந்திகழிக்க வேண்டுமென்றும் கூறினாராம்.

கைம் பெண்ணும் ஆசாமியின் வார்த்தையை நம்பி, ரூ. 40, 000 மதிப்புள்ள தனது நகைகள் எல்லாவற்றையும் ஒரு டின்னில் போட்டு மூடி வைத்தார். காலையில் எழுந்ததும் டின்னையோ, சந்நியாசியையே வீட்டில் காணாது திகைத்துப்போனார் அக் கைம் பெண்!

## 41 அல்ஜீரியர்கள் கொல்லப்பட்டனர்

அல்ஜியர்ஸ், மே 11

அல்ஜியர்ஸிலும் ஓரானிலும் நேற்று ஐரோப்பிய இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரின் பலாத்கார சம்பவங்களினால் 41 அல்ஜீரியர்கள் பலியானார்கள்.

அல்ஜியர்ஸிலும் ஓரானிலும் வீதிகளில் கொல்லப்பட்ட இந்த 41 அல்ஜீரியர்களில் 15 பேர் பெண்கள்.

அல்ஜீரியர்களை அமைதியாக இருக்குமாறும் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினரின் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் அதிகாரிகள் அறிவித்தனர்,

இதேசமயம் பாரிசில் பிளாஸ்டிக் வெடிகுண்டு சம்பவங்கள் காரணமாகக் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட 14 பேர்களுக்கு 4 வருடத்திலிருந்து ஆயுட்காலம்வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

# பணமோசடி வழக்கில் எதிரி விடுதலை

## சாட்சிகள் இருவருக்கு அபராதம்

திருகோணமலை, வெள்ளி

நிலாவெளி கூட்டுறவுச் சங்க பொருளாளரான திரு. சண்முகம்பிள்ளை என்பவர்மேல். சங்கப் பணமான 1800 ரூபாவை மோசடி செய்ததாகத் தொடரப்பட்டவழக்கு திருமலை மாவட்ட நீதிபதி திரு. சி. வி உடலகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. முடிவில் எதிரி குற்றவளியல்லவென நீதிபதி தீர்ப்பளித்தார். பொய்ச்சாட்சியம்கூறியதற்காக திரு. இராசஐயா, திரு. கனகரத்தினம் ஆகிய இருவருக்கும் தலா ரூபா 50 அபராதம் விதித்தார்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் பத்மநாதன், சம்பந்தன் அனுசரணையுடன் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் ஆஜரானார். முடிக்குரியதரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டி. பண்டாரநாயகவும் ஆஜரானார்.

## பாரத படை மேனன் விளக்கம்

புதுடில்லி, மே 11

காங்கோவில் பணியாற்றித் திரும்பிய பாரத விமானப்படை வீரர் மத்தியில் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் பேசினார்.

"வெளிநாடுகளுக்கு படைகளை அனுப்பக்கூடிய நிலையில் இன்று பாரதநாடு இல்லை. என்றாலும் உலகில் சமாதானத்தை நிலைகாட்டுவதற்காக ஐ. நா. எடுக்கும் முயற்சிக்கு பாரதம் தனது கடமையைச் செய்யத் தயாராக இருக்கிறது" என்று திரு. மேனன் கூறினார்.

அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால் வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய்இருக்கிறோம். பலத்திற்கும் வீரியத்திற்கும்உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும் போழுது அதிகக்கடியானருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

லாவோஸ்

# இடது சாரித் தலைவருக்கு நடுநிலைமைத் தலைவர் தந்தி

பாரிஸ், மே 11

தற்பொழுது பாரிசில் தங்கியுள்ள லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா லாவோசின் இடதுசாரித் தலைவர் இளவரசர் சுவன்ன வாங்கிற்கு அனுப்பியுள்ள ஒரு தந்திச் செய்தியில் கைப்பற்றப்பட்ட நாம்தா நகரிலிருந்து இடதுசாரிப் படைகளை யுத்த நிறுதத எல்லைக்கோட்டுக்கு அப்பால் திரும்புமாறு கோரியுள்ளாரெனத் தெரிகிறது.

லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு புதிதாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் இளவரசர் சுவன்னபூமா தமது தந்தியில் கோரியுள்ளார்.

இதே சமயம் லாவோஸ் நிலைமை சம்பந்தமாக சோவியத் அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்ட பல விஷயங்களுக்கு அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## படைகுறைப்பு மகாநாடு
### தொடர்ந்து நடத்த ரஷ்யா சம்மதம்

ஜெனிவா, மே 11

ஜெனிவாவில் நடைபெறும் 17 நாடுகளின் படைகுறைப்பு பேச்சுவார்த்தைகளை இடையூறின்றி ஜூன் முதல் திகதிக்குப் பின்னரும் தொடர்ந்து நடத்துவதற்கு சோவியத் யூனியன் தயாராக இருப்பதாக சோவியத் பிரதிநிதி திரு. ஸோரின் நேற்று ஜெனிவா படைகுறைப்பு மகாநாட்டில் தெரிவித்தார்.

படைகுறைப்பு மகாநாடு ஜூன் மாதம் முதல் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுககு ஒத்திவைக்கப்படவேண்டுமென்ற தனது யோசனையை வலியுறுத்தப் போவதில்லையென்று திரு. ஸோரின் நேற்றுக் கூறினர்.

## மன்னூர் நெசவு நிலையங்களின் வளர்ச்சி

மன்னர், வெள்ளி

குடிசைக் கைத் தொழிலை ஊக்குவிப்பதன் மூலம் மன்னர் மாவட்ட கிராமங்கள் படிப்படியாகப் பொருளாதாரத்தில் முன்னேறுமென்ற முழு நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நெசவு நிலையங்கள் சிறிது காலத்துக்குள்ளேயே பெரும் பயனைக் கொடுக்கக் கூடியதாக விளங்குகின்றது.

பேசாலை, எருக்கலம்பிட்டி, விடத்தல் தீவு, மன்னர் முதலாமிடங்களில் நடத்தப்பட்ட மேற்படி நிலையங்கள் ஊர்மக்களுக்கேயுதவக்கூடிய அளவில் தொழில் விருத்தி செய்துள்ளன.

## எதிரியைக்கைதுசெய்ய பகிரங்க வாரண்ட்

தெல்லிப்பழை, வெள்ளி

புன்னலைக்கட்டுவனைச்சேர்ந்த வ. ராககன் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த கந்தன் குண்டுமணி என்பவரைக்கல்லால் தாக்கிக் காயப்படுத்தியதாக சுன்னகம் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி கோர்ட்டில் ஆஜராகவில்லை. நீதிபதி எதிரியைக் கைதுசெய்யுமாறு பகிரங்க வாரண்ட் பிறப்பித்து வழககு விசாரணையை ஒத்திவைத்தார்.

# ஆரம்ப பாடசாலைகளுக்கு நிதிஉதவி தொடர்ந்து அளிக்கப்படவேண்டும்

கொழும்பு, வியாழன்

ஆரம்ப பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் உதவி நன்கொடை தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டும் என்ற தீர்மானம் உள்ளடங்கிய மகஜர் ஒன்றை உள்நாட்டு இலாகாவின் சார்பில் உள்நாட்டுக் கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகத்தில்லா, தேசியக் கல்விக் கமிஷனிடம் சமர்ப்பித்துள்ளார். அவர் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

1. ஆரம்ப பாடசாலைகளுக்கு உதவி நன்கொடை அளிக்கப்படும்முறை தொடர்ந்து இருக்கவேண்டும். ஆனல் நன்கொடைப் பணம் உள்ளூராட்சி மன்றங்களிடம் கொடுக்கப்பட வேண்டும்.

2. ஆரம்ப பாடசாலைகளை நடத்துவதில் முந்திய தனிப்பட்ட மனேஜர்களும், மதஸ்தாபனப் பாடசாலை மனேஜர்களும் எடுத்துக்கொண்ட பங்கை, உள்ளூராட்சி மன்றங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. ஆரம்பக் கல்விப் பொறுப்பைஉள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைத்து அவை வெற்றிகரமாகக் நடைபெற்ருல் இத்திட்டம் மற்றப் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

கல்விக் கமிஷன், உள்ளூராட்சி மற்றங்களின் தலைவர்களைக் கூட்டி இது பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று திரு. மகத்தில்லா ஆலோசனை கூறியுள்ளார்.

பாடசாலைக்ளை உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைத்தால், பாடசாலைக் கென பல தரப்பட்ட வேலைகளுக்கு கல்விப் பகுதி செலவழிக்கும் பணத்தை மிச்சப்படுத்த முடியும். பாடசாலைகளின கட்டிட வேலைகள் போன்றவற்றை உள்ளூராட்சி மன்றங்கள், தமது கூலியாட்களைக்கொண்டே செய்விக்க முடியும். அத்துடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பாடசாலையை மேற்பார்வையிடுவதில் கல்விப் பகுபினருக்கு உதவி செய்ய முடியும் என்பதையும அவர் தனது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பருத்தித்துறை, வெள்ளி

தம்பசெட்டி மெதடிஸ்த பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. ஏ. செல்லையா உயரப்புலம் மெதடிஸ்த பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். உயரப்புலம் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஏ. ஜே. மயில்வாகனம் தம்பசெட்டி மெதடிஸ்த பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# அரசியல் கட்சிகளுக்கு பாகிஸ்தானில் புதிய தடை

கராச்சி, மே 11

பாகிஸ்தானில் அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்கும் புதிய அவசரச் சட்டம் ஒன்று அவசரமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய சட்ட சபை, அரசியல் கட்சிகள் சம்பந்தமாகச் சட்டம் இயற்றும்வரை அரசியல் காரியங்களுக்காக கட்சிகள் அமைக்கக்கூடாது என்று இந்தப் புதிய உத்தரவு கூறுகிறது.

இந்த உத்தரவை மீறி கட்சிகள் அமைப்பவர்களுக்கு ஒரு வருடச் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்று உத்தரவு கூறுகிறது.

## இங்கிலாந்திடமிருந்து இலங்கை நிதி உதவி கோரியுள்ளது

கொழும்பு, வியாழன்

36,000 பவுண் அளவு உதவி அளிக்கும்படி இலங்கை அரசாங்கம் இங்கிலாந்தை வேண்டியுள்ளது. இவ்வேண்டுகோள் இங்கிலாந்து நிதிப்பகுதியில் பொருளாதார உதவிப் பிரிவிற்கு இலங்கையிலிருக்கும் இங்கிலாந்து வெளிநாட்டுத் தூதுவர் மூலம் விடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்உதவி இலங்கைப் பல்கலைக்கழக இரண்டாவது வைத்தியக் கல்லூரிக்கும், பொறியியல் கல்லூரிக்கும் தளபாடங்கள் அமைக்கும் பொருட்டு கோரப்பட்டுள்ளது.

இவ்வுதவி பெரும்பாலும் 'லபோரட்டரி' தளபாடங்களாகவே தேவைப்படுகின்றது என இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்புத் திட்டத்தின் கீழ் கோரப்பட்டிருக்கும் இவ்வுதவியில் சுமார் 30,000 பவுண் பொறியியல் கல்லூரிக்கும் மிகுதி 6,000 பவுண் மட்டுமே வைத்தியக் கல்லூரிக்கும் உபயோப்படுத்தப்படும்.

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும், டாக்டர், என்ஜினியர் போகாத நெருக்கடியைத் தீர்க்கவே, பலரை பயிற்றுவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது

பேராதனைப் பொறியியல் பகுதி அடுத்த ஆண்டு ஜூனில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே 89 பேர் படிக்கும் பேராதனை வைத்தியக் கல்லூரியில், இன்னும் 160 பேர் வடுகிற ஜூனில் அனுமதிக்கப்படுவார்கள்.

## விடுதலை செய்ய மறுப்பு

பஞ்சிம், மே 10

கோவா விடுதலை இயக்கத்தில் கலந்து கொண்டது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு போர்ச்சுக்கலில் நீண்டகாலச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மோகன் தாஸ் என்பவரையும் தேவி பாண்டே என்பவரையும் விடுதலை செய்வதற்கு போர்ச்சுக்கல் அரசாங்கம் மறுத்துவிட்டது. இவர்களிருவரும் இந்தியப் பிரஜைகள் என்பதால் சிறைவாசம் முழுவதையும் அவர்கள் அனுபவிக்கவேண்டுமென்றும் போர்ச்சுக்கல் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## நெருக்கடி ஏற்படுத்த கோரிக்கை

லண்டன், மே 10

இன ஒதுக்கல் கொள்கையை எதிர்க்கும் இயக்கத்தினர் தென்னுபிரிக்க அரசாங்கத்தின்மீது ராணுவ பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

## தமிழ்நாட்டில் மேலும் ஒரு சர்வகலாசாலை

சென்னை, மே 10

தமிழ்நாட்டில் மேலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என்றும், இது மதுரையில் இருக்க வேண்டும் என்றும் கல்விமந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

## ஐ. நா. வில் தென் ரொடீஷியா

நியூயோர்க், மே 10

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் தென் ரொடீஷிய பிரச்னை விவாதத்துக்குவரும் என நிச்சயமாக நம்பப்படுகிறது.




காலையிலோ, நடுப்பகலிலோ, அல்லது எந்த வேளையிலாயினும் உங்கள் களைப்பை நீக்க ஸல் பருகுங்கள். என்னே அதன் அருஞ் சுவை! அதைத் தண்ணீருடனே கலந்து பருகலாம் அல்லது டீயுடனே கோப்பியுடனே சேர்த்தும் அருந்தலாம்—எப்படியும் அது மிக நேர்த்தியான பானம்! அது சிக்கனமானதும் கூட—அதன் விலை குறைவு, அது முழுதும் கரைந்து விடுகிறது, அதனுல் பாலச் செலவும் சீனிச் செலவும் மிச்சமாகிறது. ஆதலால் ஸலைப் பருகி மகிழுங்கள்...தெம்பைப் பெறுங்கள்.

**ஸல் உடன் கரையும் மோல்டட் பால் பருகுங்கள்**

**குடும்பத்தார் உடன் விரும்புவது**

...களால் தயாரிக்கப்பட்டது

## மணி வாக்கு

திருவள்ளுவரின் வாழ்க்கையைப்பற்றிய விவரங்கள் தெரியாவிடினும், பல நூற்றாண்டுகளாக தெய்வத் திருக்குறள், கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தியுள்ளது. திருக்குறளின் உண்மை உபதேசங்களை உலகனைத்தும் திருக்குறள் ஆராய்ச்சிசபையினர் சாரம் செய்ய வேண்டுகிறேன்.

-பாபு ராஜேந்திரபிரசாத்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 29 உ (12-5-62)

## ராஜன்பாபு

சுதந்தர பாரதநாட்டின் முதல் ராஷ்டிரபதியாக பத்தாண்டுகள் பணியாற்றிய பாபு ராஜேந்திரப் பிரசாத், இந்தியப் பொதுமக்களின் அமோகமான அன்பைப் பெற்று அப்பெரிய பதவியிலிருந்து விலகுகின்றார்.

அவர்ஒருபெரியமனிதர். அவர் தம் வாழ்க்கை நம் வாலிபர்களுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும். கல்லூரிப் படிப்பிலே முதல்தரமாகத் தேறியவர். மகாத்மாகாந்தி நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்கு சங்குநாதம் செய்தபோது, ராஜன்பாபு தம்மை, காந்தி அடிகளின் தலைமையில் ஓர் போர்வீரராகப் பதிவுசெய்து கொண்டு பன்முறையும் சிறை சென்ற தியாகவீரர். தமக்காக இன்றி நாட்டுக்காகவே தம்மைப் பூரணமாக அர்ப்பணித்தார்.

நாடு விடுதலை பெற்றபின் மலைபோன்ற சோதனைகள் ஏற்பட்டன. அச்சோதனைக் காலத்திலே ஒரு சிறந்த ராஷ்டிரபதியாக இருந்து தொண்டாற்றி ஜனநாயகத் தேரை நன்கு நடத்திவழிகாட்டியுள்ளார். பிரபிரதமர் நேருஜி கூறியுள்ளது போல், கஷ்டமான இக்காலத்திலே நாட்டைச் சீரான வழியில் செலுத்துவதற்கு ராஜன் பாபு ராஷ்டிரபதியாகக் கிடைத்தது, இந்தியாவின் பெரும் அதிர்ஷ்டமேயாகும்.

சாந்தம், பொறுமை, தியாகம், தெய்வபக்தி முதலிய நற்குணங்களுடன் கூடிய ராஜன்பாபு, ஜனாதிபதி எனும் மிக உயர்ந்த பதவி வகித்து, சற்றும் பெருமையோ படாடோபமோ இன்றி, அப்பதவியைப் பல்லாண்டுகள் வகித்து, நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தார். மகாத்மா காந்தி காட்டிய அறவழியிலேயே தமது வாழ்க்கையை எளிய முறையில், அன்புடனே நடத்தி வருகின்றார்.

இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் உற்ற நண்பர் அவர். தென் இலங்கையுடன் தமது விஜயத்தை முடிக்காமல் யாழ்ப்பாணத்துக்கும் வந்து, தமிழரைக் கௌரவித்துப் பல நல்லுரைகள் வழங்கினார். அவர் விஜயத்தின் ஞாபகமாக இங்கு ஒரு பிரதான வீதிக்கும், அவர் பெயர் சூட்டப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பதவியிலிருந்து விலகினாலும் வினோபாபாவேயின் இயக்கத்தில் சேர்ந்து, சமூகத்துக்குக் கடைசிவரை தொடர்ந்து பணியாற்ற ராஜன்பாபு தீர்மானித்துள்ளார். மனதில் சற்றும் கசப்பின்றி பிறருக்கு மேலான எடுத்துக்காட்டாக பூரண வாழ்க்கை வாழும் பாரதரத்னமான பாபு ராஜேந்திரப் பிரசாத், நீடூழி வாழ்ந்து மக்கள் குலத்துக்கு மேலான தொண்டாற்ற வேண்டுமென்பது நமது மனப்பூர்வமான பிரார்த்தனையாகும்.

# தமிழ்ப் பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டம்

## 'விவசாயம், குடிசைக் கைத்தொழில்களில் ஊக்கம்தேவை

'பொருளாதார மாணவன்'

எமதுசமூகத்தினரை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுள் பொருளாதாரப் பிரச்சினையே மிகவும் முக்கியமானதாகும். எதிர்காலத்தில் எமது தமிழ் இளைஞர்களுக்கு எப்படி வேலைதேடிக் கொடுக்கப் போகின்றோம் என்பதே இன்று எம்மை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய கேள்வியாகும்.

இவ் வேலையில்லாத் திண்டாட்டம் தமிழர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில் இருதலைக்கொள்ளி எறும்பாகவே காட்சியளிக்கின்றது. ஒரு பக்கத்தில் தேசிய அடிப்படையிலும் மற்றப் பக்கத்தில் எமது சமூகஅடிப்படையிலும் இப் பிரச்சினையை நாம் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

தேசிய அடிப்படையில் இப் பிரச்சினையை நாம் ஆராய்ந்தால் இது எம் நாட்டவர்க்கு மட்டும் பிரத்தியேகமாகவுள்ள பிரச்சினையல்ல என்பது தெளிவாகும். பெருகும் சனத்தொகையே வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கிய காரணம். மற்ற நாடுகளிலும் இந்நிலை ஏதோஒரு காலத்தில் தோன்றியிருக்கும் என்பதற்கு அக்காலச் சரித்திரங்கள் சான்று பகரும். எமது கல்விமுறை, 'கால்சட்டை' உத்தியோகத்தை விரும்பும் எமது இளைஞர்களின் வேட்கை, உழவுத் தொழில் நாட மறுத்தல், போன்றவை இவ்வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும் மற்றய காரணங்களாகும்.

### நகரப்பகுதியில் பிரச்சினை அதிகம்

இன்று எமது நாட்டின் சனத்தொகை 1 கோடியை எட்டிவிட்டது என்பது எல்லோரும் அறிந்ததே. இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நமது நாட்டில் தனிநபர் சராசரி வருமானமும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. கிட்டத்தட்ட ரூ. 500 வருமானமாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியினருள் சுமார் 40 இலட்சம் பேர் 15 வயதுக்குட்பட்டவர்கள். கிட்டத்தட்ட 35 இலட்சம் பேரே எம் நாட்டில் வேலைசெய்யும் பகுதியினரைச் சேர்ந்தவர்கள். இவர்களிலும் 700,000 ஆண்கள் வரையில் வேலையின்றியிருக்கின்றனர். நகரப்பகுதிகளிலும் பார்க்க நாட்டுப் பகுதிகளிலேயே இப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது. சத்துள்ள உணவுபோதியளவு சாப்பிடாத காரணத்தால் இப்பகுதி மக்கள் பல கொடிய நோய்களுக்கு இரையாகின்றனர்.

### தமிழ்ப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம்

சமூக அடிப்படையில், இப் பிரச்சினையின் மற்றப் பக்கத்தை நாம் பார்ப்போமாகில், தமிழ்ப் பிரதேசங்களாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் 14-23 வயதிற்குட்பட்டவர்கள் 110,000 இருக்கின்றார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் கல்வி கற்பவர்களையும், மேற்கல்வி கற்க விரும்புவர்களையும்விட சுமார் 80,000 பேர் வேலையில்லாது திண்டாடுகிறார்கள். இத் தொகைகளை வைத்துக் கொண்டு நாம் கணக்குப் பார்த்தால் தமிழ்ப் பகுதிகளில் சுமார் 50,000 பேர் மட்டில் வேலையில்லாதிருக்க வேண்டிய ஒரு நிலை அண்மையில் ஏற்படும் என்பது திண்ணம்.

இத் தொகையினருடன், ஆணுக்குச் சமனாக நின்று வேலைகளுக்குப் போட்டி போடும் பெண்களையும் மொழி காரணமாக அரசாங்கத்திலிருந்து இளைப்பாறுபவர்களையும், வேலைநீக்கம் செய்யப்படுபவர்களையும், சேர்த்தால் இப் பிரச்சினை இன்னும் பன்மடங்காகத் தோன்றும்.

அரசகரும மொழிச் சட்டமே இந்நிலைக்கு அடிப்படைக் காரணமென்றாலும் பிழையான கல்வி, நிலமில்லாமை, சொந்த இடத்தைவிட்டு வேறிடங்கட்குச் சென்று வேலைசெய்ய மனமில்லாமை போன்ற பல காரணங்களும், இப் பிரச்சினைக்குத் துணைக்காரணங்களாகவுள்ளன என நாயகொள்ளலாம்.

பிழையாக அமைக்கப்பட்டுள்ள கல்வி முறையை நாம் உடனடியாகத் திருத்தி அமைக்க முடியாது. அதற்கு அரசாங்கம் தனது கொள்கையையே மாற்ற வேண்டும். ஆனால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் அவர்கள் தகுதிக்கேற்ப வெவ்வேறு துறையில் பயிற்சியளிப்பின் இம் முட்டுக்கட்டையை நாம் ஓரளவிற்கு நிவர்த்தி செய்யலாம்.

### சம்பிரதாயக் கட்டுப்பாடுகள்

சமூகத்தில் காணப்படும் சில சம்பிரதாயக் கட்டுப்பாடுகளும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு முக்கிய காரணம் என்று கூறவேண்டும். பரம்பரை பரம்பரையாக சமுதாயத்தில் ஒரு பிரிவினர் ஒரு தொழிலைச்செய்து வந்தமையின் அது அவர்களுக்கே உரியது என்ற ஒரு பிழையான கொள்கை எமது சமூகத்தினரிடையே இடம் பெற்றுள்ளது. இந்த நிலைமாற வேண்டும். இக்கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து எல்லோரும் எல்லாத் தொழில்களையும் செய்ய முன்வர வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொழில்தான் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை பெற்றோர் கைவிடவேண்டும். ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவரையேகணவராகக் கொள்ள சில பெண்கள் விரும்புகின்றனர். அனேகமாக பெரிய அரசாங்க உத்தியோகஸ்தரையே அவர்கள் நாடுவர். சமூகத்திலிருந்து இந்தப் 'பழக்கம்' நீக்கப் பட வேண்டும்.

தம் நாட்டையோ நகரப்பகுதியையோ விட்டு வெளியே வேலைதேட விருப்பமின்றி சிலர் இருக்கின்றனர். வேலையின்றி முன்னோர்களால் விட்டுச் செல்லப்பட்ட நிலங்களை வைத்து வாழ்க்கையை நடாத்திக் கொண்டு 'நாம் நிலச்சுவாந்தர்கள்' என்று சொல்லித்திரிவோரும் உண்டு. இவர்களும் இந்நிலைமாறி வெளியே சென்று வேலை செய்ய முன்வர வேண்டும்.

### கல்வியறிவில்லாதவர் பாடு

கல்வியறிவில்லாதவர்கள் பாடு இன்னும் பரிதாபகரமானது. வறுமையும் கடனும் இந்த ஏழைகளுடன் கூடப் பிறந்த சகோதரர்கள். வறுமையிலே பிறந்து, வறுமையிலேயே வளர்ந்து வறுமையிலேயே அவர்கள் இறக்கிறார்கள். அவர்களுக்கு கல்வியறிவில்லாதது வேறுவேலை கிடைக்காமலிருப்பதற்குத் தடையாயிருக்கலாம். ஆனால் போதிய நிலமுமில்லாமல் ஒரு துண்டுக்காணியில் பயிர்செய்து காலத்தை ஓட்டுவதை அவர்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். தம் சொந்த இடத்தை விட்டு வெளியே சென்று வேலைபார்ப்பதை இவர்கள் வெறுக்கிறார்கள். இந்நிலையில் சுருட்டுக் கைத்தொழிலும் மிகவும் நஷ்டமான ஒரு நிலையை தற்பொழுது அடைந்துள்ளது. இதனால் ஏழைமக்கள் மிகவும் கஷ்டமடைகினறனர். இது மட்டுமின்றி இவர்களுக்கு வேறு வேலை செய்யமுடியாத தன்மையும் இவர்களது நிலைக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

### பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம்?

இப் பிரச்சினைகள் தாமாகத் தீரும் என்று நாம் காத்துக்கொண்டிருக்கக் கூடாது. உணவு, உடை இவற்றைப் பொறுத்தவரையிலாவது நாம் சுதந்திரமாக வாழவேண்டும். எமது முதாதையர்பயிரிட்டே தம் வாழ்நாளைக் கழித்தனர். அவர்கள் புதுமுறைகளைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளனர் என்பது நாமறிந்த உண்மை. எனவே ஏன் நாம் எம் தகுதிக்கேற்ப எம் வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ளக் கூடாது?

யாழ்ப்பாணத்தவரின் உழவுச் சிறப்பைப் பற்றியெல்லாம் மேனாட்டவர்கள் புகழ்ந்துகூறியிருக்கிறார்கள். இவையெல்லாம் அறிந்திருந்தும் நாம் ஏன் வேலையற்றவராகத் திரிய வேண்டும்? இலங்கையின் 40 சதவீதம் நெல் உற்பத்தி செய்யும் எம் தமிழ்ப்பகுதி வறுமையில் உழலக்கூடாது.

உழவுத்தொழிலை மேற்கொள்வதற்கு எம்மிடம் போதியளவு நிலமில்லை என்பது சிலரின் நொண்டிச்சாட்டுகளில் ஒன்று. ஆனால் உண்மையில் 25,000 ஏக்கர் நெல் விளையும் நிலம் இன்று தமிழ்ப்பகுதிகளில் பயிரிடப்படாமல் கிடக்கக் காணலாம். ஏன் இந்த வரண்ட நிலங்களையெல்லாம் நாம் நெல் விளையும் செழிப்புள்ள நிலங்களாக மாற்றக்கூடாது. எம் குடாநாட்டிலிருந்து நாம் வெளியேறி கிளிநொச்சி, பரந்தன், போன்ற பகுதிகளில் பயிரிடப் படாமல் இருக்கும் பகுதிகளை விளை வயல்களாக்கவேண்டும்.

### விவசாயமும் குடிசை கைத்தொழிலும்

விவசாயம் மட்டும்போதாது; நாம் குடிசைக் கைத்தொழில்களையும் ஊக்குவிக்கவேண்டும். கைத்தறியை நாம் ஆதரிக்க வேண்டும். அழிந்து கொண்டிருக்கும் இத்தொழிலைநாம்புதுப்பித்துவிளம்பரஞ் செய்யவேண்டும். இன எழுச்சி உண்டாகியிருக்கினல இந்த நேரத்தில் எம் கைத்தறித் துணிகளை நாம் ப[illegible]தால் நல்ல வருமானம் வ[illegible] என்பதில் ஐயமில்லை

(6ம்-பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ஜெர்மன் சுவாமி கௌரி பாலாவைப்பற்றி அன்று எழுதினேனல்லவா? "அவர் சும்மாவிருக்க சூத்திரம்" என்ற பெயரில் ஒரு தமிழ் நூலை அச்சிட்டு நேற்று அன்புடன் அனுப்பியுள்ளார். மொத்தம் ஐம்பது பிரதிகளே அச்சிட்டுள்ளாராம்!

ஒவ்வொரு பக்கத்திலும் 'சும்மா இரு' என்பது பற்றி, தமிழ் முனிவர்கள் சொன்ன ஒரு சூத்திரம் வெளியாகியுள்ளது. இந்தமாதிரி ஒரு புத்தகத்தை இதுவரை கண்டதில்லை. தமிழ்மொழிப் புதையலிலே, மறைந்துள்ள பல ரத்தினங்களைத் தேடிக்கண்டு பிடித்து, திரட்டித் தந்துள்ளார் இந்த ஜெர்மானியர். இதைக் காண எனக்குப் பாரதியார் கூறிய, "திறமையான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம்செய்தல்வேண்டும்" என்ற வாக்கு ஞாபகம் வந்து பெருமைகொண்டேன்.

இதைப் படித்துவிட்டுக் கொல்லைப்புறம் சென்றேன். அங்கு தென்னை, பலா, மா முதலிய மரங்கள் காய்கனிகளைக் கணக்கின்றித் தாங்கிக் கொண்டு நமக்குக் தர பேசாமல் காத்திருந்தன. வேப்பமரம் கூட பூத்துக்குலுங்கித் தரையெல்லாம் தன் மலர்ப் பாயை விரித்திருந்தது.

தென்னைகள், வேரினல் பூமியிலே உண்ட நீரை இனிமையாக்கித் தலையாலே தந்து இக் கோடையிலே தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படிமௌனமாக வேண்டின. மாமரத்தில் கிளைக்குக்கிளை கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்குகின்றன. பலாவோ கிளைகளில் மட்டுமன்றி, அடிமரம், வேர் முதலிய எல்லாப் பகுதிகளிலும் பெரிய பெரிய காய்கள் காய்த்து சுமக்கமுடியாமல் சுமக்கின்றன.

ஏன் இப்படி எல்லாம் காய்க்கின்றீர்கள்? என்று கேட்டேன். பதில் இல்லை. சும்மா இருந்தன. நம்மிடம் காசு பணம் வேண்டாமல், நமக்காகவே இரவு பகலாக வாழ்ந்து வரும் இம்மரங்கள், மௌனமாக உபதேசிக்கும் நற்செய்தியை உள்ளச் செவியால் கேட்டேன். நாம் வெட்டினாலும் பதில் பேசாமல், நமக்கு நன்மையே செய்யக் காத்துள்ள அம்மரங்கள், மௌன குரு போல் நமக்கு உபதேசம் செய்வதைக் கண்டேன். அவை காட்டும் வழியிலே நாமும் செல்வதென்பது சுலபமா? சும்மா இருக்கும் திறன் எவ்வளவு அரிது!

* * *

இலங்கையிலே கல்விப் பணியை பல்லாண்டுகளாகச்செய்து வந்த என். பி. பிள்ளை அவர்கள் திருவனந்தபுரத்திலே திடீரெனக் காலமான செய்தியைக் கேட்டு இங்குள்ள அவரது பல நண்பர்களும் வருந்துவர். அவரது மனைவியார், இராமநாதன் கல்லூரியில் நீண்டகாலமாக பிரின்ஸிபலாக இருந்து தொண்டாற்றியவர். இவ்விருவரும் கல்வித் தொண்டை அழகாகச் செய்து, ஒரு இலட்சிய தம்பதிகள்போல் விளங்கினர். அன்பும் பண்பும் மிக்கவர்கள். சமூக வாழ்விலே ஈடுபட்டு, பலரது மதிப்பையும் பெற்றனர். தன் மனைவியாரையும், ஏராளமான அன்பர்களையும், விட்டுப் பிரிந்த அன்பர் என். பி. பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைவதாக!

* * *

"எல்லா உலகமும் ஆனாய் நீயே, ஏகம்பமேவியிருந்தாய் நீயே, நல்லாரை நன்மை அறிவாய் நீயே, ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே, பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே, புகழ்ச்சேவடியென்மேல் வைத்தாய் நீயே, செல்வாய செல்வம் தருவாய் நீயே, திருவையாறு அகலாத செம்பொற் சோதி."

—திருநாவுக்கரசர்

# மீன்பிடியாளர், விவசாயிகளுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கவேண்டும்

## தொழில்நுட்பக் கமிஷனிடம் இருதமிழ் எம். பி.க்கள் வற்புறுத்து

கொழும்பு, வெள்ளி

மீன்பிடியாளர்கள், விவசாயிகள், மரவேலை செய்வோர் ஆகியோர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சிகள் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் இலங்கைத் தொழில் நுட்பக் கல்விக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் வற்புறுத்தினர்.

அகில இலங்கை வர்த்தக கலைமன்றத்தினர் தொழில்நுட்பக்கல்வி கமிஷன் முன் சாட்சியமளித்தார்கள். உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு எம். சிவசிதம்பரமும், சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினமும், மற்றும்மன்றச்செயலாளர் திரு. மா. புவனேந்திரன், வைத்தீஸ்வர வித்தியாலய வர்த்தக ஆசிரியர் திரு. க. சபாநடேசர், தி. க. சிவசம்பு ஆகியோர் மன்றத்தின்சார்பில் சாட்சியமளிக்க வந்திருந்தனர். சாட்சியவிபரம் வருமாறு:

பொதுவர்த்தக கல்வி 8-ம் வகுப்பு ஆரம்பத்தில் தொடங்கி எல்லாப்பாடசாலைகளிலும் வர்த்தகக் கல்வி போதிக்கவேண்டும்.

சிரேஷ்ட வர்த்தக வகுப்பு ஆரம்ப க. பொ. த. வகுப்பில் இருநது ஆரம்பிக்கவேண்டும்.

ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒரு தொழில்நுட்பப் பாடசாலை ஆரம்பிக்கவேண்டும். யாழ்ப்பாணத் தொழில்நுட்பப் பாடசாலையை சிரேஷ்ட தொழில்நுட்பப்பாடசாலையாக மாற்றவேண்டும். எதிர்காலத்தில் கொழும்பு தொழில்நுட்பப்பாடசாலையில் நடைபெறும் வகுப்புக்கள் சிங்களமொழியில் நடைபெறும் என அறியக்கிடப்பதினல் இங்குள்ள எல்லா வகுப்புக்களையும் யாழ்தொழில்நுட்பப்பாடசாலையில் தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்த வேண்டும்.

இலங்கை சர்வகலாசாலையில் வர்த்தக பட்டதாரி வகுப்பையும், நிர்வாகத்துறை அமைப்பு வகுப்பையும் நடாத்த வேண்டும்.

இதற்குக் கமிஷன், இவ்வகுப்புக்கள் ஆரம்பிப்பது அரசாங்கத்தின்கொள்கை. ஆனல் போதியளவு விரிவுரையாளர்கள் இல்லாமையினல் ஆரம்பிக்கவில்லை. பிறநாட்டில் இருந்தே விரிவுரையாளர்களை வரவழைத்து வகுப்பை ஆரம்பிக்க ஒழுங்குகள் செய்யவேண்டும் என்று தெரிவித்தது.

3-ம் வகுப்பு அரசாங்க லிகிதர்கள் 2-ம் வகுப்புப் பரீட்சைக்குக் கணக்குப்பதிவியல், கணக்கு வைக்கும்முறை ஆகிய பாடங்கள் எடுக்கவேண்டியிருப்பதினல் ஒவ்வொரு தொழில்நுட்பப் பாடசாலைகளிலும் மாலைநேர வகுப்பு (உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்) ஆரம்பிக்கவேண்டும்.

பலதரப்பட்ட தட்டச்சுப் பொறிப்பலகைகள் பலதரப்பட்ட கம்பெனியாரால், பலதரப்பட்ட தமிழ்த் தட்டச்சு யந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. ஒரு வகையான தட்டச்சுப் பொறி இயலில் பயின்றவர்கள் மற்றத் தட்டச்சுப்பொறிகளை இயக்க முடியாத அவலநிலை ஏற்படுகின்றது. ஆகவே தரப்படுத்தப்பட்ட தமிழ்த்தட்டச்சுப்பொறியை அமைக்க ஆவன செய்யவேண்டும்.

சி. பா. த. பரீட்சையில் வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்தவரை தற்காலிக வர்த்தக ஆசிரியர்களாக நியமித்து பின்பு அவர்களுக்கு இரண்டு வருட பயிற்சிகொடுத்து நிரந்தர வர்த்தக ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும்,

---

## ஸ்தலஸ்தாபன சேவைச் சட்டம்

### புதிய திருத்தம்

கொழும்பு, வெள்ளி

உள்ளூராட்சிச்சபையைச் சேர்ந்த அதிகாரிகளில் எவராவது ரூபா 5,000க்கு மேற்பட்ட தொகை மிகுதிக் கட்டணமாகச் செலுத்தவேண்டுமென ஆடிட்டர்ஜெனரலால்கண்டுபிடிக்கப்பட்டால் அவரை வேலையினின்றும் நீக்குதல்செய்வதற்கேற்ற முறையில், ஸ்தலஸ்தாபனச் சட்டம் அண்மையில் மாற்றி அமைக்கப்பட விருக்கிறது.

குறிப்பிட்ட உள்ளூருக்குரிய ஒரு ஸ்தலஸ்தாபனக் கந்தோரை கணக்குப் பரிசோதகர் பார்வையிடச் செல்லுமுன் இதுபற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யவும் இந்தச் சட்டம் இடங்கொடுக்கும். பொதுமக்கள் தங்கள் முறையீடுகளைத் தெரிவித்துக்கொள்ளும்பொருட்டே இம் முறை மேற்கொள்ளப்படும்.

கணக்குப் பரிசோதனையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கையை அடுத்தே இப் புது மாற்றங்கள் புகுத்தப்படுகின்றன. இதுபற்றி அட்டோர்ணி ஜெனரல் கந்தோர் ஸ்தலஸ்தாபனப்பகுதியாருடன் தற்பொழுது பேச்சுவார்த்தை நடாத்துகின்றது.

புதுத் திட்டம், கணக்குப் பரிசோதகர் வருடத்தில் ஒருதடவையாவது, ஸ்தலஸ்தாபன உள்ளூர் காரியாலயங்களுக்குச் சென்று பரிசோதனையிட வசதியளிக்கின்றது.

---

## பிள்ளைகளுக்கு இலவச புத்தகங்கள்

### மதுரை நகரசபை தீர்மானம்

மதுரை, மே 11

மதுரை நகரசபையைச் சேர்ந்த 66 தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இலவசமாக சிலேட்டுப் பலகைகள், புத்தகங்கள் வழங்குவதென மதுரை நகரசபை தீர்மானித்துள்ளது. இதனல் நகரசபைக்கு ஒருலட்சத்து 75,000 ரூபாய் செலவாகும்.

---

## தமிழ்ப் பகுதிகளில்...

(4ம பக்கத் தொடர்ச்சி)

இவ்வகையிலேயே நாம் கள்ளிலிருந்து சர்க்கரை உற்பத்தியை விஸ்தரிக்கலாம். இங்கும் போதிய ஆர்வமும் ஊக்கமும் இருப்பின், நல்ல முன்னேற்றத்திற்கு இடமுண்டு.

வெவ்வேறு விதமான வகைகளிலும் வாசனைகளுடனும்,சுருட்டு வியாபாரத்தை நாம்பெருப்பித்து முன்னேறலாம். இவையெல்லாவற்றையும் கூட்டுறவு முறையில் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். அதுமட்டுமன்றி எமது வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்குத் தீர்த்துவைக்கலாம் என்பதில் ஐயமில்லை.

---

## பெருந்தொகையான உப்பு இறக்குமதி

கொழும்பு, வெள்ளி

வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான உப்பு இங்கு வந்துள்ளது. தூத்துக்குடியிலிருந்து தலா 200 தொன் கொண்ட பத்துப் படகுகள் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளன. ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து 10,000 தொன் உப்பை 'டிமோஸ்தின்ஸ் பந்தாலியன்' என்னும் கப்பல் திருக்கோணமலை துறைமுகத்துக்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளது.

இறக்குமதியாகும் ஒவ்வொரு தொன் மீதும் அவற்றை அனுப்பி வைக்கும் நாடுகள் 1 ரூபா 50 சதம் வீதம் செலுத்த வேண்டும் என முன்பு செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் பெயரில் இங்கு வந்து சேர்ந்த உப்பு, கப்பல்களிலிருந்து இறக்கப்படுகிறதற்குச் சிறிது தாமதமாயிற்று.

இந்த முறையை அடுத்த இறக்குமதி வரை ஒத்திப் போடுவது என உப்பு இலாகா தீர்மானித்தது.

---

## பல பிரச்னைகளில் சமரச முடிவு

களுத்துறை, வெள்ளி

செ.ன்ஜோர்ஜ் குருப்பின் பல டிவிஷன்களில் தொடர்ந்து இருந்து வந்த பிரச்னைகள் தோட்டத்துரையுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்யப்பட்டது.

றப்பர் பால்வெட்டு பகிர்ந்து கொடுத்தல்,கல்யாணம் செய்த பெண்களுக்கு வேலை, வேலை மறுக்கப்பட்டு வந்தவர்களுக்கு வேலை போன்றவைகளும் இன்னும் பல பிரச்னைகளும் தீர்க்கப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் மத்துகம இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெற்றது.

---

## உதவி அரசாங்க அதிபர் பாராட்டு

கிளிநொச்சி, வெள்ளி

கனகபுரம்குடியேற்ற அதிபர் தலைமையில், இங்கு தேசிய சேவைத்தினம் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்ச்சியில் கனகபுரத்தில் உள்ள பிரதான தெரு திருத்தியமைக்கப்பட்டது.

இச்சேவை இப்பகுதி மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் முதல் புதன் கிழமை பொதுசேவை செய்ய இக்கிராம மக்கள் இசைந்துள்ளார்கள். இந் நிகழ்ச்சியைப் பார்வையிட்ட யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ஐவன் சமர விக்கிரமா இப்பகுதி இளைஞர்களையும், குடியேற்ற அதிபரையும் பாராட்டினர்.

மாலை விவசாயப்பகுதியினரால் படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது.

---

## பிள்ளையார் ஆலயங்களின் வருடாந்த உற்சவம் ஆரம்பம்

பருத்தித்துறை, வெள்ளி

துன்னலை வடக்கு அல்லைப்பற்றுன் சுப்பிரமணியர் ஆலயம், துன்னலை மேற்கு துனுவில் பிள்ளையார் ஆலயம், கரணவாய் தெற்கு கல்லடிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் வருடாந்த உற்சவங்கள் இன்றையதினம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாயின.

தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே 18-ந், 19-ந் திகதிகளில் நடைபெறும்.

---

## கொழும்பு நகரசபை விஸ்தரிப்புக்கு மறுப்பு

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மாநகரசபையின் வட்டாரங்களை அதிகரிக்கும் நோக்கத்துடன், நகரத்தைப் புதிய முறையில் விஸ்தரிக்கும் தீர்மானத்தை எதிர்த்து இச்சபையின் அங்கத்தவர்கள் உள்நாட்டு அமைச்சரிடம் ஆட்சேபிப்பார்கள்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் மாநகர சபை விஸ்தரிக்கப்பட்டு 6வெட்டாரங்கள் அதிகரிக்கப்பட்டனஎன்றும்,எனவே இப்பொழுதும் நகரத்தை விஸ்தரித்து வட்டாரங்களை அதிகரிப்பதில் எதுவித காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர்கள் மந்திரியிடம் தெரிவிப்பர் எனத்தெரிகிறது.

சனத்தொகை அதிகரிக்காத காரணத்தால் வட்டாரங்களை அதிகரிக்க வேண்டியதில்லை என அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

விஸ்தரிப்புச் செய்வதாகவிருந்தால் 1959ம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசாங்கம் செய்தது போன்று, ஒரு சுயேச்சையான குழுவிடம் அவ் வேலையைச்சமர்ப்பிக்கவேண்டுமென்று மந்திரியை இவர்கள் கேட்டுக்கொள்வர்கள் எனத் தெரிகிறது.

மாநகரசபைக் கமிஷனர் இந்தக் கடமையையேற்ருல் இவ் வருட முடிவில் நடைபெறவிருக்கும் தேர்தல் தாமதமாகிவிடும் என்னும் காரணத்தால் இவ்வேலையை அவரிடம் கொடுப்பதை அங்கத்தவர்கள் விரும்பவில்லை.

---

## உணவுபற்றி விசாரணை செய்ய கமிட்டி

கொழும்பு, வெள்ளி

அரசாங்க மீன்பிடி யந்திரப் படகுகளில் வேலை செய்வோருக்குக் கொடுக்கப்படும் உணவு பற்றி ஒரு உத்தியோக பூர்வமான கமிட்டி அண்மையில் ஆராய இருக்கிறது. விவசாய நீர்ப்பாசனமந்திரி காரியாலயத்தினரால் இக்கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

மீன்பிடி இலாகா உதவி டைரக்டர், திறைசேரி பிரதிநிதியொருவர் கடற்படைப் பிரதிநிதியொருவர் ஆகியோர் இக்கமிட்டியில் கடமையாற்றுகின்றனர்.

இப்படகுகளில் வேலை செய்வோருக்கு அதிகமான உணவு அளிக்கப்படுகின்றது என்ற ஒரு முறையீட்டைத் தொடர்ந்தே இக் கமிட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

---

## இவர்களுக்கும் பென்ஷன்

கொழும்பு, வெள்ளி

எல்லாத் தேயிலை, ரப்பர் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் பென்ஷன் உரிமைகள் வழங்க அரசாங்கம் எண்ணியுள்ளது. திறைசேரி, இது பற்றி ஒழுங்குகள் செய்வதில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது.

---

## சிங்களம் படித்தால்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கத்தினல் முடியாமலுள்ளது. உங்கள் பிள்ளைகள் சிங்களத்தைப் படித்துவிட்டால் வேலை தேடிக் கொடுத்துவிடுமா?

உங்கள் பிள்ளை உங்கள் தாய்மொழியில் கல்வி கற்கும் உரிமை இல்லாமல்போக வேண்டுமா?

உத்தியோகத்தில் எமது எதிர்காலம் தங்கியிருக்க முடியாது. தமிழ்ப் பகுதிகளில் பொருளாதார விருத்தி செய்வதிலேயே நாம் இனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்பில்லாமல் தமிழ்ப்பகுதிகளிலுள்ள கச்சேரிகளிலும், நீதிமன்றங்களிலும் சில சிங்களக் குமாஸ்தாக்களை நியமிப்பதன்மூலம் சிங்களச் சட்டத்தை அமுலாக்கிவிட முடியாதென்பதை நமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

---

## நல்ல கருவாடும் பசளையானது

கொழும்பு, வெள்ளி

பாவிப்புக்கு ஏற்ற கருவாடு, பசளைக்கு உகந்ததென்று கூறி 1 அந்தர் ரூ. 2 விலைப்படி, கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் ஒரு பிரத்தியேக வியாபாரிக்கு விற்பனவு செய்துள்ளதெனக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்துவதற்கு சி. ஐ. டி. பொலிஸ் அதிகாரிகளை உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின வேண்டியுள்ளார். பிரதம மந்திரிக்கு மேற் கண்ட புகார் கிடைத்ததன் பேரிலேயே, மந்திரி இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். சுமார் 2,000-ம் அந்தர் கருவாடு வரை 'பசளை' யாக விற்கப்பட்டுள்ளது.

---

## திரு. என். பி. பிள்ளை காலமானர்

கொழும்பு சங்கிராக் கல்லூரியிலும், நெடுகாலம் பரமேஸ்வராக்கல்லூரியிலும் ஆசிரியராகவிருந்தவரும், பின்னர் இராமநாதன் கல்லூரி நூல்நிலையத்துக்குப் பொறுப்பாளராகவிருந்தவருமான ஸ்ரீ என். பி. பிள்ளை திருவனந்த புரத்தில் சடுதியாக புதன்கிழமை இரவு (9-5-62) காலமானர். இவரின் மனைவி ஸ்ரீமதி பிள்ளை நெடுங்காலமாக இராமநாதன் கல்லூரியில் அதிபராகவிருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது

---

## பிரஞ்சு மொழியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபராதம் விதித்ததாகவும் பின்னர் ரூபா 85,000 ஆகக் குறைந்ததாகவும் அவர் தெரிவித்தார். திருமதி ஞானப்பிரகாசத்திற்குப் பணம் கட்ட முடியாத பட்சத்தில் நீதிபதி முன் கொண்டுவரப்பட்டுப் பின்னர் பிணையில் விடப்பட்டதாகவும் அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் குறுக்கு விசாரணையின் பொழுது தமது விசாரணையின் போதுசுங்க இலாகா சட்டப் பிரமாணங்களை மீறி பவுண் கடத்தல் செய்த குற்றத்தை திருமதி ஞானப்பிரகாசம் செய்துள்ளார் எனத் தான் எண்ணியதாக திரு. பத்மநாதன் கூறினர். பின்னர் ஏப்ரல் 24-ம் திகதியன்று, தங்களிடமிருந்து பவுணை நீதியற்ற முறையில் பறிமுதல் செய்யப்பட்டது என குற்றம் சாட்டப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர் என்றும் அதற்குப் பொறுப்பாக ரூபா 5,000 கொடுக்கப் பட்டதென்றும் அதன் பின்னர் தான் மாறிச் சென்று விட்டமையால் தனக்கு மேற்கொண்டு நடந்ததொன்றும் தெரியாதென்றும் கூறினர்.

பாரியைச் சேர்ந்த ரூபர்ட்டுபுவா மேலும் சாட்சியமளிக்கையில் தமது வர்த்தகஸ்தாபனத்தாரின் முத்திரையை இலங்கையின் வடபாகத்திலுள்ள ஆச்சாரிகளினலும் இடக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

சுங்க இலாகா சப் கலெக்டர் திரு. டி. டி. பி. செப்பன்ஸ்டோல், அரசாங்க பரிசோதகர் திரு. ஜி. ஏ. சி. சிறிமானே ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

இவ்வழக்கில் வழக்கறிஞர்களின் தொகுப்புரை இம்மாதம் 26-ம் திகதி காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும்.

முடிக்குரிய தரப்பில் டிப்பியூட்டி சொலிசிட்டர் ஜெனரல் திரு. கிரிஸ்டி அலஸ், திரு. சிவா. பசுபதியின் உதவியுடன் திரு. சி. சி. சோமசேகரத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

வழக்காளிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி., திருவாளர்கள்: எஸ். சூரசங்காரம், ஆர். ஆர். நல்லையா, டி. கனகசிங்கம் ஆகியோர் திரு. எஸ். இரத்தினசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராயினர்.

## ரூ. 2500 பெறுமதியான வாழைக்குலைமோசடியாம்

### சந்தேக நபரை ரிமாண்டில் வைக்க உத்தரவு

தெல்லிப்பழை, வெள்ளி சுன்னாகத்தைச் சேர்ந்த வி. இரத்தினசிங்கம் என்பவர் கொழும்பில் ஒரு வியாபாரியிடம் ஒப்படைககுமாறு 2,500 ரூபா பெறுமதியான வாழைக் குலைகளை குருநாக்கலையைச் சேர்ந்த வி. பி. மாசிறஸ் அப்புஹாமி என்பவரிடம் அவரது லொறியில் ஏற்றி அனுப்பிவிட்டாராம்.

ஆனல் இப்பொருள் உரியவரிடம் ஒப்படைக்கப்படவில்லையென்று திரு. இரத்தினசிங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும் அவர் பொலிசாருக்கு முறைப்பாடு செய்தார். பொலிசார் அப்புஹாமியைக் கைது செய்ததுடன் வாழைக்குலையை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் மோட்டார் லொறியையும் கைப்பற்றி மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி சந்தேக நபரை 2,500 ரூபா பிணையிற் செல்லுமாறும் லொறியை 5,000 ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறும் உத்தரவிட்டார். சந்தேக நபரான அப்புஹாமி பிணை செலுத்தத் தவறியமையினல் நீதிபதி அவரை விளக்க மறியலில் வைக்குமாறும், லொறியைப் பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை இம்மாதம் 15 ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

## கார் இறக்குமதி

கொழும்பு, வியாழன் நூறு செக்கோசிலவேக்கியக் கார்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. டிசம்பர் 1961ல் கார் இறக்குமதி தடைசெய்யப்பட்டபின் இதுவே முதற் தடவையாக கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் ஒரு ஸ்தாபனத்தாரால் இக்கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அக் குறிப்பிட்ட ஸ்தாபனம் கார்களின் பல பாகங்களை இறக்குமதிசெய்தபின் ஒன்று பொருத்தும ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது. 'ஸ்கோடா'க் கம்பனியைச் சேர்ந்த இரு என்ஜினியர் அங்கு கடமையாற்றுகின்றனர்.

ஒன்று பொருத்தப்பட்ட ஒன்றே, அல்லது எல்லாக் கார்களையும வேண்டுவதற்கும், வேண்டிய பொழுது வரிவிதிப்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்றும் இதன் பேரிலேயே இறக்குமதி அனுமதிக்கப்பட்டுள்ளது. என கைதொழில் பகுதி சுட்டிக்காட்டியுள்ளது.

## 1964-ல் கட்டுநாயக்கா விமான தளம் அபிவிருத்தி

கொழும்பு, வியாழன் கட்டுநாயக்காவிமானத்தளம் 1964-ம் ஆண்டு சர்வதேச போக்குவரத்துக்குத் தயாராகிவிடும் என போக்குவரத்து மந்திரி திரு. கலுகல்லை பார்லிமெண்டில் அறிவித்தார். இதுபற்றி பி. ஓ. ஏ. ஸி. ஸ்தாபனத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கை திருப்தியளித்திருப்பதாயும் மந்திரி கூறினர். உள்நாட்டு விமான சேவையை விஸ்தரிக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினர்.

## கலாரஞ்சன சபா இசை விழா

தெல்லிப்பழை, வெள்ளி தெல்லிப்பழை கலாரஞ்சன சபா ஆதரவில் இசை விழா சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவில் யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்கள் பலரும் கலந்து கொளவர்.

முன்னூறு கார்களுக்குஇறக்குமதியாளர் விண்ணப்பித்திருந்தும் 100 கார்களே அனுமதிக்கப்பட்டுள்ளன. என அரசாங்க அதிகாரி ஒருவர் கூறுயுள்ளார்.

இவ்விறக்குமதி பற்றியும் தொழிற்சாலை அமைப்புப்பற்றியும் 1960 ஆகஸ்ட் மாதம் தொட்டு குறிப்பிட்ட ஸ்தாபனமும் அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

## "சித்திரக் கலைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்"

### ஓவிய, கைப்பணிக் காட்சி திறப்பு விழாவில் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி "தமிழ்க் கலைவளர்ச்சியின் காலங்களை பல்லவ காலம் முதலியவற்ருல் கால பாகுபாடு படுத்தி அழைத்துவந்தாலும் யாழ்ப்பாணத்தில் இன்று சித்திரக்கலையின் வளர்ச்சி மிகவும் குன்றிய நிலையிலேயே இருக்கிறது. சமய அடிப்படையில் இக் கலைகள் சிங்களப்பகுதிகளில் விருத்தியடைந்துவருகிறன. எமது இன்றைய நிலைமைக்கு அரசியல் சூழ்நிலையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஒரு சிலரிடையே இக் கலைக்கு ஆதரவு இருந்தபோதிலும் பொதுமக்களது ஆதரவு இல்லையென்றே சொல்லவேண்டும். இந்த நிலைமையை மாற்றியமைக்கவேண்டும்."

இவ்வாறு ஒய்வுகால ஓவியர் கழகத்தின் ஓவியக் கைப்பணி கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய கொழும்புக் கலைக் கல்லூரி ஆசிரியரும், இக் கழகத்தின் போஷகருமான திரு. எம். எஸ். கந்தையா குறிப்பிட்டார் கழகக் காரியதரிசி திரு. இ. பொன்னம்பலம் வரவேற்புரைநிகழ்த்தினர்.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்த ஓவியக் கைப்பணிக் கணகாட்சி தொடர்ந்து 3 தினங்களுக்கு கடைபெறுகின்றது. இக் கண்காட்சியில் ஓவியங்கள், மட்பாண்ட வேலை. உலோக வேலை, மரவேலை, ஆர்போறிக் வேலைகள் அடங்கிய பலவித பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இயற்கைக் காட்சிகள் தொடக்கம், உலக அறிஞர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் ஈருகப் பல பெரியார்களது உருவங்களும் ஓவியங்களாகவும், மட்பாண்ட உலோக வேலைப்பாடுகளாகவும் அமைக்கப்பட்டு கைவண்ணங்களாக வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பேசிய திரு. கந்தையா இக் கழகக் காரியதரிசி திரு. இ. பொன்னம்பலம், திரு. குலநாயகம் ஆகியோரது அயராத ஊக்கத்தையும் மற்றும் உறுப்பினர்களது ஒத்துழைப்பையும் பாராட்டிப் பேசினர்.

திரு. கந்தையா மேலும் பேசியதாவது:

1948-ம் ஆண்டின்பின் சித்திர ஆசிரியர்கள் தேவை ஏற்பட்டபோது சிலர் வேதனத்திற்காக இதனை மேற்கொண்டனர். அல்லாமல் அதிக கலையார்வம்தான் காரணமல்ல; ஈடுபாடும் அதிகம் இல்லை.

யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் பேலும் பேசும் போது குறிப்பிட்டதாவது:

அரசியலைப்போன்று கலையார்வம் சாதாரணமாக எல்லோரிடமும் ஏற்பட்டுவிடாது. இப்படியான கழகங்களே இப்படியான ஆக்கவேலைகளில் ஈடுபட்டு கலை வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

## கைம்பெண் கொலை வழக்கில் எதிரிக்கு மீண்டும் ரிமாண்ட்

பருத்தித்துறை, வெள்ளி கரவெட்டி மேற்கு கந்தர் கைம்பெண் கண்ணகை என்பவரை வாளால் வெட்டி வயல் வெளியில் கொலை செய்ததாக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கந்தன் வீரகத்தி என்பவர் மீது பொலிசாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எதிரியை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி விசாரணையை இம்மாதம் 22ம்திகதிக்கு ஒத்தி வைத்தார்.

வியாபாரி மூலையைச் சேர்ந்த சிவகுரு என்பவரைக் கொலை செய்ததாகத் தொடரப்பட்ட பிறிதோர் கொலை வழக்கு விசாரணை இம்மாதம் 14ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

## கத்தியால் வெட்டியதாக வழக்கு

### எதிரிகளுக்கு தலா ரூ. 75 அபராதம்

பருத்தித்துறை, வெள்ளி வல்லிபுரம் தம்பிராசாவுக்கு கத்தியால் வெட்டியதாக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வீரகத்தி கிருஷ்ணபிள்ளை, வேலு வல்லிபுரம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் எதிரிகள் இருவருக்கும் தனித்தனி ரூபா 75 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினர்.

## 100 இந்திய பிரஜைகள்

புதுடில்லி, மே 10 பாகிஸ்தானிய 100 இந்திய பிரஜைகள் சிறையிலும், விசாரணையிலும் இருந்துவருவதாய் அறிவிககப்பட்டது.



## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 12-5-62**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை. 6-45கே. வி. தம்பு - பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும் - செய்திச்சுருள், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 பரமேஸ்வரி விஜயரத்தினம் - பாட்டு, 10-15 பக்திப்பாடல்கள்.

**ஞாயிறு 13-5-62**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 குரல் வகை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 இஸ்லாமிய சமயப் பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைக் குரல், 6-10 குரல்வகை, 6-30 ஜலதரங்கம்.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-30 எஸ். மார்க்கண்டேயர் - பட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'கடைசி நாடகம்' - நாடகம், 9-45 தேர்ந்த இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

**சனி 12-5-53**

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 காரைக்குடி கமலா—வீணை.

பகல் 1-00 துதிப் பாடல்கள், 1-30 பிள்ளைக்கனி அமுது, 1-50குரலிசை, 2-10 காரைக்குடி கமலா—வயலின்.

மாலை 4-45விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 4-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வாழ்க்கைப் பாதை—நாடகம், 8-40 இசை மாலை, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு, 13-5-62**

காலை 6-45 மங்கள இசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வசந்தா ஜயராமன்—பாட்டு, 8-15 சந்தியாவந்தனம் ஸ்ரீனிவாசராவ்—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி—கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 பாலம் ராமமூர்த்தி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 5-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 திருவாரூர் டி. சுப்பிரமணிய தேசிகர்-பாட்டு, 8-30 வசந்தா ஜயராமன்—பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

## சாம்பமூர்த்தி

புதுடில்லி, மே 10

ரஷ்யாவிலுள்ளதைப் போல் இந்தியாவிலும் இசைப்போட்டி நடத்தப்படவேண்டுமெனமாஸ்கோவிலிருந்து திரும்பியபேராசிரியர் சாம்பமூர்த்தி கூறினா

## இரண்டாவது கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பம்

காங்கேசன் துறை, வெள்ளி

காங்கேசன் துறை நடேஸ்வரன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் 12 கழகங்கள் பங்குபற்றுகின்றன. ஸ்புட்னிக் மைதானத்தில் நடைபெற்று வரும் போட்டிகளில் சில போட்டி முடிவுகள் வருமாறு:-

தையிட்டி ஸ்டார் விளையாட்டுக்கழகத்திற்கும், வசாவிளான் 'ஸ்கைலாக்ஸ்' கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் தையிட்டி ஸ்டார் 2-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. சங்கானை ஓனிக் விளையாட்டுக் கோஷ்டியும், காங்கேசன் துறை 'போட்யாட்' கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சங்கானைக் கோஷ்டி 2-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிகளுக்குத் திருவாளர்கள் த. இராசரத்தினம், பி. சின்னத்துரை ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மன்னாரில் மீன்பிடி அபிவிருத்தி

### கடனுதவித்திட்டம்

மன்னார், வெள்ளி

மன்னாரில் மீன்பிடி அபிவிருத்திக்காக மீன்பிடி இலாகா பெருமளவில் முயற்சி செய்துள்ளது.

இயந்திரப் படகுகளைக் கடனுதவி மூலம் கொடுக்க முன்வந்துள்ளது. இவற்றை உபயோகிப்பதன் மூலம் தூரமான கடலிலேயும் போய் மீன் பிடிக்கக் கூடியதாக இருக்கும். இவற்றைப் பெற்றுப் பயனடையும் நோககமாகக் கடற்கரைப் பிரிவுகளில் மீனவர்களுக்கு இதையொட்டிப் பிரசாரம் நடத்தப்படுகிறது.

## செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

### புதியசெயலாளர் தெரிவு

கிரிலப்பனை, வெள்ளி

அண்மையில் கிரிலப்பனைத் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற செந்தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்கினர்கள் கூட்டத்தில் திருவாளர்கள் அன்ரனி பெர்னாண்டோவும், ஞ. சாமித்தம்பியும் மன்றத்தின் இணைச் செயலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். திரு செல்லையா அவகாச இன்மையால் செயலாளர் பதவியை விட்டு விலகியதையடுத்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்யனர்.

கூட்டத்திற்கு திரு. டேவிற் இராசையா தலைமைவகித்தார்




# ‘நாட்டுக்குவழிகாட்டும் ஒளி ராஜன்பாபு’

—நேரு

## “மனநிறைவுடன் பதவி விலகுகிறேன்”

—ராஜன்பாபு

### டில்லி அளித்த மகத்தான பிரிவுபசாரம்

புதுடில்லி, மே 11

“நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் நாட்டின் விடுதலைக்குப் பின்பும் என் கடமையைச் செய்துவிட்டேன். இப்பொழுது மன நிறைவுடனும் மன மகிழ்வுடனும் ராஷ்டிரபதி பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறேன்” என்று டாக்டர் ராஜேந்திர பிரசாத் நேற்று டில்லி மக்கள் தமக்களித்த மாபெரும் பிரிவுபசார வைபவத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

புதுடில்லி ராம லீலா மைதானத்தில் டில்லி மக்கள் சார்பில் நேற்று மாலை ராஷ்டிரபதி ராஜன் பாபுவுக்கு மகத்தான பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. மைதானமும் மேடையும் மின்சார விளக்குகளாலும் கொடிகள், தோரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ராஷ்டிரபதி பவனிலிருந்து ராஜன் பாபுவும் டாக்டர் ராதா கிருஷ்ணனும் திறந்த காரில் ராம லீலா மைதானத்துக்கு பவனியாக வந்து சேர்ந்தனர். வழி நெடுக வீதிகள் அலங்கரிக்கப்பெறிருந்தன. ராஷ்டிரபதியின் 12 வருடகால சேவையைக் குறிக்கும் முகமாக 12 அலங்கார வாசல்கள் அமைக்கப்பட்டிருந்தன. திறந்த காரில் கூப்பிய கரங்களுடன் ராஜன் பாபு வீதியோரங்களில் நின்ற பெருந்திரளான மக்களுக்கு வணக்கம் செலுத்தினர். பவனியின் போது மழை பெய்ய ஆரம்பித்ததால் காரின் கூடாரம் மூடப்பட்டது. மக்கள் மழையையும் பொருட்படுத்தாது ராஜன் பாபுவைத் தரிசிக்க நின்றனர்.

பிரிவுபசார வைபவம் மகாத்மா காந்திக்குப் பிடித்தமான ‘வைஷ்ண வஜனதோ’ என்ற கீர்த்தனையுடன் ஆரம்பமானது. ராஜன் பாபு மீது புனையப்பட்ட சில கவிதைகளை கவிஞர்கள் வாசித்தனர்.

பிரிவுபசாரப் பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது. தங்கத்திலான பாரத தேசப் படமும் காஷ்மீர் சால்வையும் ராஜன் பாபுவுக்கு வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் பிரதமர் நேரு இந்தியில் பேசுகையில் ராஜன்பாபுவின் சேவைகளை எடுத்துக் கூறினர்.

“ராஷ்டிரபதி ராஜன்பாபு நாட்டுக்கு வழிகாட்டும் ஒளி. வருங்காலச் சரித்திர ஆசிரியர்கள் ராஜன் பாபுவின் 12 வருடகால பதவிக்காலத்தை ராஜன் பாபுவின் சகாப்தம் எனறு” எழுதுவர் என்று அவர் குறிப்பிட்டார்.

“விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்ற நவீனமும், புராதன பண்பும் பாரத நாட்டுக்கு அவசியம். இந்த இரண்டும் இணைந்திருக்க வேண்டும். புராதப்பண்பும் நவீன பண்பும் இணைந்த தகைமை கொண்டவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்” என்று நேரு கூறினர்.

உபராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் ஆங்கிலத்தில் பேசுகையில், பாரதத்தில் வாழ்ந்து மறைந்த ஜனகர், மகாவீர் போன்ற மகான்களுடன் ராஜன் பாபுவை ஒப்பிட்டுப் பேசினர். “டாக்டர் ராஜேந்திர பிரசாத் நீடூழிகாலம் வாழ்ந்து நாட்டுக்கு வழிகாட்ட வேண்டும்மென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்” என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

டாக்டர் ராஜேந்திர பிரசாத் தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றிதெரிவித்துப்பேசுகையில் பாரதம் உலகில் சிறந்து விளங்குமென்பதில் தமக்கு ஐயமில்லை என்று நம்பிக்கை தெரிவித்தார்.

“மகாத்மாவின் போதனைகளை உலகில் பரப்பவேண்டியது பாரத நாட்டின் கடமை” என்று அவர் குறிப்பிட்டார்.

“பதவிலிருந்து விலகும் இச்சமயத்தில் எனக்கு பல அன்பளிப்புக்கள் கிடைத்தன. இந்த அன்பளிப்புக்களை விட மக்கள் என்மீது காட்டும் அன்புதான் எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது” என்று பாபு கூறினர்.

லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் புதிய உபராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள டாக்டர் ஸக்கீர்ஹுசெயினும் டில்லி நகர மேயரும் கலந்துகொண்டனர்.

## ராதாகிருஷ்ணன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவு செய்யப்பட்ட பின் பிரதமர் நேரு, மந்திரிகள், எம். பி. க்கள் ஆகியோர் பாராட்டினர். மக்களின் நல்லெண்ணமும், அன்புமே தமது வெற்றிக்குக் காரணம் என டாக்டர் ராதா கிருஷ்ணன் பாராட்டுகளுக்குப் பதிலளித்தார்.

ராஜ்யசபையில் அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்ட போது அவரது செயல் திறனும், கண்ணியமும் பிரஸ்தாபிக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் அங்கத்தினர் திரு. பூபேஸ்குப்தா உட்படப் பலர் அவரை வெகுவாகப் பாராட்டினர்கள்.

பதவியிலிருந்து விலகும் ராஜன்பாபு நாளை இரவு8-30க்கு வானெலியில் உரை நிகழ்த்துவார். இந்தியாவின் சகல நிலையங்களும் அதை அஞ்சல் செய்யும்.

## ராஜினமா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் ராஜினமாச் செய்யப் போவதாய் திரு. வில்லியம் பெர்னண்டோ கூறினர்.

ஒழுங்கீனங்களுக்கு உதவியாய் இருந்த அதிகாரிகளுக்கெதிராய் நடவடிக்கை எடுக்காது போனல் தமது ஸ்தானத்தை ராஜினமாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென திரு. குணசேகரா கூறினர். இதனல் தாம் வாக்காளர்கள் முகத்தில் விழிக்க முடியாமலிருப்பதாக அவர் கூறி, தமது தொகுதியில் பௌத்தபிக்கு ஒருவர் ஒரு விஷயம் சம்பந்தமாக தமது வாயில் கத்தியால் குத்துவதாகப் பயமுறுத்தினர் என்ற விஷயத்தையும் குறிப்பிட்டார். 18 மாதங்கள் நீடித்த ஒரு விசாரணையின்பின் இந்த பிக்கு குற்றத்திலிருந்து விடுக்கப்பட்டார் எனவும் அவர் கூறினர்.

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அபிவிருத்திக்கு ரூ. 7000 உபமான்யம் ஒன்றை கல்வி மந்திரி திரு. பதியுதீன் முகமது பிரேரணை செய்தார்.

திரு. வி. ஏ. கந்தையா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“வகுப்புவாத அடிப்படையைக் கைவிட்டு வடக்கிலும், கிழக்கிலுமுள்ள தமிழ் மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வியை விஸ்தரிக்கும்படி அரசாங்கத்துக்குவிண்ணப்பித்துக் கொள்கிறேன். தமிழ் மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெறுவதில் அக்கறையுடையவர்களாய் இருக்கிருர்கள். இவ்விதக் கல்வி பெறுவதின் மூலம் அவர்களுக்கு அரசாங்க சேவையில் வேலைகிடைக்காதபோதிலும், தனிப்பட்ட ஸ்தாபனங்களிலாவது வேலைபெற வசதி கிடைக்கும். கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் பிரதானமாக வர்த்தக பாடங்களும், சில தொழில் நுட்ப பாடங்களுமே கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

வர்த்தக வகுப்புக்கள் சிங்களத்தில் மட்டும் போதிக்கப்படுகின்றன. தனது மொழிக் கொள்கை தமிழ்க் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்காது என அரசாங்கம் உறுதியளித்ததற்கு இது மாறுனது. பாலர் வகுப்பிலிருந்து சர்வகலாசாலைவரை ஒருதமிழ்மாணவனுக்கு தாய் மொழியிலேயே போதிக்கவேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்டதொழில் நுட்பக் கல்லூரி, தமிழர்களை அடித்துத் துன்புறுத்த ராணுவத்தின் பிரதான நிலையமாய் இருந்தது”

## பாணந்துறையில் கொந்தளிப்பு

கொழும்பு, வெள்ளி

பாணந்துறை கத்தோலிக்கர்களுக்கும், பௌத்தர்களுக்குமிடையே கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருப்பதாயும், நிலைமையைத் தவிர்க்க கலாச்சாரமந்திரி இரு சாராருக்குமிடையே உடனடியாக ஒரு மகாநாட்டை நடத்தவேண்டும் எனவும் பாணந்துறை எம். பி. லெஸ்லி குணவர்த்தன பார்லிமெண்டில் கோரினர். கத்தோலிக்க ஆலயம் ஒன்றை அமைக்க ஒரு காணியைத் தெரிவு செய்ததைத் தொடர்ந்து நெருக்கடி ஏற்பட்டிருப்பதாயும், சமரச நடவடிக்கை எடுக்காவிடின் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடும் என்றும் அவர் கூறினர்.

## இசைக்கலைஞர் வருவதை தடைசெய்க

—கெனமன்

கொழும்பு, வெள்ளி

இசைக் கலைஞர்கள் இங்கு வருவதைத் தடைசெய்ய வேண்டுமெனவும், தற்போது இந்தியாவிலிருந்து இசைக் கலைஞர் இங்குவர கொடுக்கப்பட்டுள்ள 12 பாஸ்போர்ட்டுக்களை ரத்துச் செய்யும்படி திரு. பீட்டர்கெனமன் பார்லிமெண்டில் கூறினர்.

விசேஷ சூழ்நிலையில் உயர்தர கலைஞர்கள் வருவதைத் தடுக்கவேண்டியதில்லை என்றும், யாழ்ப்பாணத்தில் இப்போது உற்சவகாலமாய் இருப்பதால் பலர் இங்கு வருவது உள்நாட்டு கலைஞர்களுக்கு வாய்ப்பில்லாமல் செய்து விடுவதாயும், கூறிய அவர், இந்தியாவிலிருந்து வரும் இசைக் கலைஞர் சிலர் இங்கு ஏமாற்றப்படுகிருர்கள் என்றும் கூறினர்.

## மாநகரசபை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சரியாகப் பதியப்படுகின்றனவா என அறியும் பொருட்டு தமிழிலேயே பதியப்பட வேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானமும், தற்போது யாழ். மத்திய கல்லூரியினல் பாவிக்கப்படும் மைதானம் யாழ்மாநகர சபைக்குச் சொந்தமான படியால் அந்த விளையாட்டு மைதானத்தை யாழ் மாநகர சபை விளையாட்டு மைதானமாக்க வேண்டுமென்னும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறின.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பதுளை) விஜிதா (மஹகெலியா) கிரசன்ட் (புத்தளம்)





ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த
இரத்தினபுரி இளவரசி
டைரக்ஷன்: ராமண்ணா

5வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 10 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி,
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி
நடித்த
அனர்கலி



### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

‘விக்னராஜா’ பரிசுக் கிண்ணத்துக்காக ‘ஈழநாடு’ நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

இக்கூப்பனைக் கத்தரித்து ‘கிரிக்கெட் வீரர் 1962’, C/o. ‘ஈழநாடு’, தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.



### தேவை

மோட்டார்கரேச்சுக்கு வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. 2 மெக்கானிக், 4 ரிங்கேர்ஸ், 1 பெயின்ரர், 1 ஸ்பிறே பெயின்ரர். கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். பெம் மோட்டோ, 451, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 65-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.